28.01.2026

அ.வ.எண். 48/2022

வா.சா.1 – திருமதி.சுசீலாதேவி, க/பெ.தியாகராஜன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 28.01.2026 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வழக்குரையில் 3 அடி தடம் என விற்பனை செய்துவிட்டார்கள் என்றும், அளந்து பார்த்த போது 2 ¾ அடி தடம் இருப்பதாக சொல்லி வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில் அளந்தோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, சந்தேகத்தின் பெயரில் அளந்து பார்த்தேன். 2003 ம் ஆண்டு சொத்தை விலைக்கு வாங்கினேன் என்றால் 2007 ல் தான் நினைக்கிறேன். என்னுடைய வழக்குரையில் நீதிமன்ற ஆணையர் வந்தபோது தான் 2 ¾ அடி இருந்தது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்தை விற்றவர்கள் மீது ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நரசிம்மன் மற்றும் பரமசிவத்தை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கில் கோரிய பரிகாரத்தை எனக்கு சொத்தை விற்றவர்களிடம் தான் கேட்க வேண்டும் என்றும், பிரதிவாதியிடம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. எனக்கு சொத்தை விற்ற நரசிம்மன் மற்றும் பரமசிவத்தை சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 90 சதுரடி நிலத்தை அடி நிலத்துடன் கிரயம் பெற்றுள்ளனர் என்றும், அதில் நான் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. ஏழுமலை எங்கள் நிலத்தில் 3 அடி நிலம் விடாமல் அவரது சுவற்றை கட்டியுள்ளார்.

3. வழக்கில் எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், எனக்கும் பிரதிவாதி குடும்பத்திற்கும் தண்ணீர் குழாய் அமைப்பதில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக பழிவாங்குவதற்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2007 ம் ஆண்டு சொத்தை கிரயம் வாங்கியுள்ள நிலையில் 2022 ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளது காலவரையறை சட்டத்தால்

பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur